நெல்லை மாலை முரசு



# 2014 புத்தாண்டு பலன்கள்

# 2014-ம் ஆண்டு பொது பலன்

**1.1.2014** முதல் *31.12.2014* வரை உள்ள காலங்களில் 12 ராசிகளுக்கும் உள்ள ராசி பலன்கள் இந்த வருடத்தின் கிரக நிலைகளின் நிலையை வைத்து, வருட பலன்கள், வருடத்தின் முற்பகுதி மற்றும் பிற்பகுதி என இரண்டு பகுதி பலன்களாகவும், மேலும் மாத பலன்களை பிரித்து எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் கிரக நிலைகளின் மாற்றங்கள் குறித்த விவரங்கள்:

குரு:– 13.6.2014ல் மிதுன ராசியில் இருந்து குருபெயர்ச்சி ஆகி கடக ராசியில் குரு உச்சம் பெறுகிறார்.

ராகு:– 21.6.2014ல் துலா ராசியில் இருந்து ராகு பெயர்ச்சியாகி கன்னி ராசியில் பிரவேசம் ஆகிறார்.

கேது:– 21.6.2014ல் கேது மேஷ ராசியில் இருந்து மீன ராசிக்கு பிரவேசம் ஆகிறார்.

குரு வக்ரம்: 22.12.2014ல் குரு அதிகார வக்ரம் பெற்று கடக



ராசியில் இருந்து சிம்ம ராசிக்கு பிரவேசம் ஆகிறார்.

செவ்வாய் வக்ரம்

45 நாட்கள் ஓர் ராசியில் இருக்க வேண்டிய செவ்வாய் இந்த வருடம் வக்ரம் பெற்று 1.3.2014 முதல் வக்ரம்.

சனி பெயர்ச்சி:

16.12.2014ல் துலாம் ராசியில் இருந்து சனி பகவான் விருச்சிக ராசிக்கு பிரவேசம் செய்து 2½ ஆண்டுகள் அந்த ராசியில் இருப்பார். கன்னி ராசிக்கு 7½ சனி விடுதல், தனுசு ராசிக்கு 7½ சனி ஆரம்பம்.

16.12.2014 முதல் 2½ ஆண்டு

மேஷம்– அஷ்டம சனி

ரிஷபம்– கண்ட சனி, களத்திர சனி

கடகம்– பஞ்சம சனி

துலாம், விருச்சிகம், தனுசு, 7½ சனி

சிம்மம்– அர்த்தாஷ்டம சனி ஆரம்பம்.

கால சர்பம்

**24.5.2014** முதல் **21.6.2014** வரை கால சர்ப தோஷத்தில் கிரகங்கள் உள்ளது.

## பொது பலன்

இந்த வருடம் குரு உச்சம் பெற்று இருப்பதால் நாட்டின் பொருளாதாரம் நல்ல முன்னேற்றம் ஏற்படும். தங்கம் விலைகட்டுப்பாட்டில் இருக்கும்.

மக்களுக்கு ஆன்மீக எண்ணங்கள் அதிகரிக்கும்,பெரிய ஆன்மீக மாற்றங்கள் நாட்டில் நாட்டு மக்களுக்கு பல நல திட்ட உதவிகள் கிடைக்கும்.

ஆலயங்களில் வசூல் செய்யப்படும். தரிசன கட்டணங்களுக்கு, நீதி துறையால் கட்டுபடும் ஆணையம் பிறப்பிக்கப்படும்.

விவசாயம்

உணவு பொருட்கள் உற்பத்தி அதிகரிக்கும். நெல், கோதுமை மற்றும் பயிறு வகைகள், பால் உற்பத்திமேலும்கனிவர்க்கம்,நல்ல விளைச்சல் உற்பத்தி ஏற்படும். விளைச்சல் அதிகரிப்பால் விலை குறையும்.

வங்கி துறையில் மாற்றமும், மக்களுக்கு சேவையும் சிறப்பாக அமையும்.

குழந்தைகளின் ஜெனனம் அதிகரிக்கும். குறிப்பாக ஆண் குழந்தைகளின் ஜெனனம் அதிகமாக இருக்கும்.

வாகன உற்பத்தி இறக்குமதி வாகனங்கள் நாட்டில் அதிகமாக இறக்குமதி ஆகும்.வெளிநாட்டில் இருந்து, சிமெண்ட் மற்றும் வாகனங்கள் இறக்குமதி, சட்டம் மாற்றத்தால் வாகனம் விலை குறையும். சிமெண்ட் விலை குறையும்.

மருந்து பொருட்களின் விலை அதிகரிக்கும். நாட்டு மருத்துவம் மற்றும்சித்தமருத்துவம்மக்களிடம் நல்ல வரவேற்பு பெறும்.

நோய்கள்

கேரளம் மற்றும் இலங்கையில் புதிய நோய்களும், மருத்துவ துறையில்தீர்க்கமுடியாதநோய்கள் மக்களுக்கு ஏற்படும். இன கலவரங்கள் மற்றும் போராட்டங்கள் அதிகரிக்கும்.

கல்விதுறை

கல்வி துறையில் புதுமையும், அனைவருக்கும் கல்வி திட்டம் சிறப்பு பெறும். அரசு கல்வி நிலையங்கள் புத்துயிர் பெறும். குரு உச்சம் பெற்று இருப்பதால் திறமையான நபர்களுக்குமட்டுமே நல்ல வேலை கிடைக்கும்.

அரசியல்

உலக அளவில் எதிர்பார்க்கும் அரசியல் மாற்றம், மக்கள் எதிர்பார்த்த நல்ல அரசியல் மாற்றம் ஏற்படும். குரு உச்சம் பெற்று சனிபார்வைமற்றும் ராகு பார்வை பெறுவதால் அரசியல் தலைவர்களுக்கு அன்னிய நாட்டு சதியால் உயிருக்கு ஆபத்து நேரிடலாம்.

பெரும்பான்மையான ஆட்சி ஏற்படும். 2014ம் ஆண்டு நன்மை தரும் வருடமாக இருக்கும்.

இந்தவருடம்குரு,சனி,ராகுஇந்த நான்கு கிரகங்களும், பெயர்ச்சி இருப்பதாலும், கிரகங்கள் இருக்கும் நிலையாய் இந்திய அரசியல் மற்றும் உலக அரசியல் நல்ல மாற்றம் ஏற்படும்.

### கிரகங்கள் தரும் நோய்கள்



சூரியன்– தலை, கண்நோய்

சந்திரன்– மனநோய்

புதன்– மூளை நரம்பு நோய்

குரு– வயிறு, குடல்நோய்

சுக்கிரன்– எய்ட்ஸ், பால்வினைப் நோய்

சனி– வாதநோய் மற்றும் அனைத்து நோய்கள்

ராகு–தோல் நோய் மருத்துவ துறையால் கண்டுபிடிக்க முடியாத நோய்

கேது– பைத்தியம் மற்றும் சித்த பிரமை, வயிற்றுவலி.




கணித்தவர்:-
ஜோதிடர் நெல்லை
சங்கர சுப்பிரமணியன்


## 2014ம் வருட நவீன காலண்டர்

| தேதி | செப்டம்பர் டிசம்பர் | ஏப்ரல் ஜூலை | ஜனவரி அக்டோபர் | மே | ஆகஸ்ட் | பிப்ரவரி மார்ச் நவம்பர் | ஜூன் |
|---|---|---|---|---|---|---|---|
| 1, 8, 15, 22, 29 | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
| 2, 9, 16, 23, 30 | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு | திங்கள் |
| 3, 10, 17, 24,31 | புதன் . | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் |
| 4, 11, 18, 25 | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் |
| 5, 12, 19, 26 | வெள்ளி | சனி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் |
| 6, 13, 20, 27 | சனி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
| 7, 14, 21, 28 | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |

2014–ம் வருடத்திற்கு தேதி, நாள், மாதம் விபரங்கள் 365 நாட்களுக்கும் தயாரிக்கப்பட்டது.

தயாரிப்பு
கோவிந்தன், கே.டி.சி.நகர், நெல்லை.